"TIMES OF INDIA"

PAGE NO: 09

DATE: 13.06.21

# Pondicherry univ among top 1,000 in World univ ranking

**Bosco.Dominique**
@timesgroup.com

**Puducherry:** Pondicherry University has been placed among the top 1,000 in the QS World University Rankings (WUR), 2022. Among the 22 Indian institutions on the list, it has been placed between 801 and 1000 after performing well in indicators like research impact, teaching commitment, citation per paper and papers per faculty.

The ranking is based on the overall performance of universities on indicators like academic reputation, employer reputation, faculty student ratio, international faculty ratio and international students' ratio among others.

"The QS World University Rankings is one of the top world rankings. It is a proud moment for Pondicherry University as it appears in the top 20 among Indian institutions. It is a significant achievement, as we secured a good position from among the participating Indian and Asian universities. Only 22 universities and institutions made an entry into the QS WUR 2022," assistant registrar K Mahesh said.

**In the QS World University Rankings, it has been placed between 801 and 1000 after performing well in indicators like research impact, teaching commitment, citation per paper and papers per faculty**

The university had been placed between 301 and 350 in the QS Asia rankings in the last four years and between 211 and 220 positions among Brazil, Russia, India, China and South Africa (Brics) universities.

Pondicherry University also participates in other prestigious world rankings like THE (Times Higher Education) World University Ranking, ACU (Association of Common Wealth Universities) Ranking and National Rankings such as NIRF (National Institutional Ranking Framework), Atal Ranking of Institutions on Innovation Achievements (ARIIA) and other industry-sponsored rankings besides various other rankings like Outlook-ICARE India University Rankings.

"THE NEW SUNDAY EXPRESS"

PAGE NO: 03

DATE: 13.06.21

# Pondy University figures in top 1,000 in QS ranking 2022

**EXPRESS NEWS SERVICE**
@ Puducherry

PONDICHERRY University has appeared in the top 1,000 Universities of the World with its rank between 801 and 1,000 category in the recently released prestigious QS World University Rankings 2022.

According to a release, it is a proud moment for the university as it has figured in the top 20 among the Indian universities and institutions that are in the rank list from India. The inclusion of Pondicherry University in the QS World University Rankings is a significant achievement, as the Pondicherry University secured a good position from among the participating Indian and Asian universities. Only 22 universities and institutions are able to make an entry into the QS World University Rankings 2022. The university scored very well with regard to performance indicators like research impact and teaching commitment, besides scoring a good ratio with regard to citation per paper and papers per faculty.

The QS World University Rankings capture the overall performance of the university with six rigorous performance indicators examining each university's strengths against all of its core missions – like academic reputation, employer reputation, faculty-student ratio, citations per paper, international faculty ratio and international students ratio.

Earlier the university had secured a rank in the QS Asia Rankings between 301-350 for the last four years and a rank in the 211 to 220 category among the BRICS universities.

The University has achieved the feat because of the constant academic and administrative support and encouragement given by the leadership of vice-chancellor and professor Gurmeet Singh, said the release.

"DINAMANI"

PAGE NO: 04 DATE: 13.06.2021

# உலகத் தரவரிசையில் புதுச்சேரி பல்கலை.க்கு இடம்

**புதுச்சேரி, ஜூன் 12:** உலக பல்கலைக்கழக தரவரிசையில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பெற்றது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில், சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: உலக பல்கலைக்கழக (கியூ.எஸ்) தரவரிசையானது முக்கியப் பணிகள், தேர்ச்சி விகிதம், நற்பெயர், அர்ப்பணிப்பு, ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வதேச ஆசிரியர்கள்- மாணவர்கள் விகிதம் உள்ளிட்ட செயல்திறன்களின் அடிப்படையில் ஆய்வு செய்து அண்மையில் வெளியிடப்பட்டது.

இதில், உலகின் முதல் 1000 பல்கலைக்கழகங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பெற்றது. நாட்டின் தரவரிசைப் பட்டியலில் முதல் 20 இடங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பெற்றது. உலக பல்கலைக்கழக தரவரிசையில் (2022) 22 பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மட்டுமே இந்திய அளவில் இடம் பெற முடிந்தது.

இதில், புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆராய்ச்சி, கற்பித்தல், அர்ப்பணிப்பு , ஆசிரியர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்ற செயல்திறன் குறிகாட்டிகளில் மிகச் சிறந்த மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தது.

உலக பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. புதுச்சேரி பல்கலைக்கழகம் கடந்த 2018-ஆம் ஆண்டு முதல் இதில் பங்கேற்று வருகிறது.

முன்னதாக, புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆசிய தரவரிசையில் 301-350 வகைப் பிரிவிலும், பிரிக்ஸ் பல்கலைக்கழகத் தரவரிசையில் 211-220 வகைப் பிரிவிலும் கடந்த 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து தரவரிசையில் இடம் பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரின் பங்களிப்புடன் வரும் ஆண்டுகளில் புதுச்சேரி பல்கலைக்கழகம் பல்வேறு உயரங்களை எட்டுவதற்கு முனைப்புடன் செயல்படும் என்று அதன் துணைவேந்தர் குர்மீத் சிங் தெரிவித்தார்.

TAN "HINDU TAMIL"

PAGE NO: 05 DATE: 13.06.21

# க்யூ எஸ் உலக பல்கலை. தர வரிசையில் புதுவை பல்கலைக்கழகம் முக்கிய இடம்

**புதுச்சேரி**

க்யூ எஸ் உலக பல்கலைக்கழக தர வரிசையானது, பல்கலைக்கழகத்தின் பல முக்கிய பணிகள், கல்வியாண்டு தேர்ச்சி விகிதம் நற்பெயர், பல்கலைக்கழகத்தின் தலைமையின் அணுகுமுறை, அர்ப்பணிப்பு , ஆசிரிய மாணவர் விகிதம், ஆராய்ச்சி கட்டுரைகள், சர்வதேச ஆசிரியர்கள் விகிதம் மற்றும் சர்வதேச மாணவர்கள் விகிதம் போன்ற 6 கடுமையான செயல்திறன் குறிகாட்டிகளுடன் தரவரிசை பட்டியல் 2022 சமீபத்தில் வெளியிட்டது.

இதில் 801 முதல் 1,000 வகைகளுக்கு ( category) இடையில் தரவரிசை பெற்ற உலகின் முதல் 1,000 பல்கலைக்கழகங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம்

**▼ க்யூ எஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையானது 2014 முதல் அதன் தரவரிசையை அறிமுகப்படுத்தி வெளியிட்டு வருகிறது.**

பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து தரவரிசைப் பட்டியலில் உள்ள இந்திய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களில் முதல் 20 இடங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம்பெற் றுள்ளது.

பல்கலைக்கழக தரவரிசையில் தற்போது 22 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் மட்டுமே இந்திய அளவில் இடம்பெற முடிந்தது. இதில் புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆராய்ச்சி, கற்பித்தல், அர்ப்பணிப்பு , ஆசிரியர்களின் ஆராய்ச்சி கட்டுரை போன்ற செயல்திறன் குறிகாட்டிகளில் மிகச் சிறந்த மதிப்பெண் பெற்று சாதனை பெற்றுள்ளது.

க்யூ எஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையானது 2014 முதல் அதன் தரவரிசையை அறிமுகப்படுத்தி வெளியிட்டு வருகிறது. இதில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 2018 முதல் பங்கேற்று வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிகரமாக தரவரிசையில் இடம்பிடித்து வருகிறது.

இச்சாதனையை படைக்க உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு புதுச்சேரிப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

மேலும் , ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு சிறந்த கல்வி ஆர்வத்தை வழங்கும் ஆசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு பங்களிப்புடன் வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகம் அதிக உயரங்களை எட்ட முனைப்புடன் செயல்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இத்தகவலை பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பு பிரிவு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

"DINATANTHI"

PAGE NO: 10 DATE: 13.06.2021

உலக தரவரிசை பட்டியலில் இடம்

## புதுச்சேரி பல்கலைக்கழகம் சாதனை

புதுச்சேரி, ஜூன்.13–
பல்கலைக்கழகங்களின் கல்வியாண்டு தேர்ச்சி விகிதம், நற்பெயர், பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பு, ஆசிரியர் மாணவர் விகிதம், ஆராய்ச்சி கட்டுரைகள் உள்பட 6 கடுமையான செயல்திறன் குறிகாட்டிகளுடன் உலக தரவரிசை பட்டியல் சமீபத்தில் வெளியிட்டது.

இதில் புதுவை பல்கலைக் கழகம் 801 முதல் 1000 வகைகளுக்கு இடையில் தரவரிசை பெற்று உலகின் முதல் 1000 பல்கலைக்கழகங்களில் இடம் பெற்றுள்ளது.

உலக பல்கலைக்கழக தரவரிசையானது 2014 முதல் அதன் தரவரிசையை அறிமுகப்படுத்தி வெளியிட்டு வருகிறது. இதில் புதுவை பல்கலைக்கழகம் 2018 முதல் பங்கேற்று வருகிறது.

முன்னதாக புதுவை பல்கலைக்கழகம் ஆசியா தரவரிசையில் 301–350 வகை பிரிவிலும், பிரிக்ஸ் பல்கலைக்கழக தரவரிசையில் 211–220 வகை பிரிவிலும் கடந்த நான்கு ஆண்டுக்ளாக தொடர்ந்து வெற்றிகரமாக தரவரிசையில் இடம்பிடித்தது வருகிறது.

"DINAMALAR"

PAGE NO: 09 DATE: 13.06.21

# கியூ.எஸ். தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கு இடம்

**புதுச்சேரி, ஜூன் 13–**
உலகின் சிறந்த பல்கலைக் கழகங்களை வரிசைப்படுத்தும் கியூ.எஸ். தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இடம் பிடித்துள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த கியூ.எஸ்., என்ற நிறுவனம், உலகெங்கிலும் உள்ள 1000 பல்கலைக் கழகங்களில் ஆண்டுதோறும் சிறந்து விளங்கும் பல்கலைக் கழகங்களை தரவரிசைப்படுத்தி, பட்டியலை வெளியிட்டு வருகின்றது.

அந்நிறுவனம் அண்மையில் தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக் கழகம் 800 – 1000 வகை பிரிவில் இடம் பெற்றுள்ளது.

பல்கலைக் கழகத்தின் செயல்பாடு, தேர்ச்சி விகிதம், ஆராய்ச்சி கட்டுரைகள் உள்ளிட்ட செயல்திறன் போன்றவை மதிப்பிடப்பட்டு, தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இந்தியாவில் இருந்து இடம் பெற்ற 22 கல்வி நிறுவனங்களில் புதுச்சேரி பல்கலைக்கழகமும் தேர்வாகி உள்ளது.

இதற்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள், ஊழியர்களை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.